# ‘திராவிட மாடல்’ அரசின் எடுத்துக்காட்டுதான் நலத்திட்ட நிகழ்ச்சிகள்!

## சென்னையில் – 1400 பயனாளிகளுக்கு நல உதவிகள் வழங்கி

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

சென்னை,நவ.29-

**சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்தநாளையொட்டி, நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சென்னை பெரியார் திடலில் நேற்று முன்தினம் நடைபெற்றது.**

**இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு கழகத்தின் 100 மூத்த முன்னோடிகளுக்குப் பொற்கிழி வழங்கி, அவர்களின் வாழ்த்துகளைப் பெற்றார்.**

**இதனைத் தொடர்ந்து, கல்லூரி மாணவ – மாணவியர் 250 பேருக்கு கல்வி உதவித் தொகை, 375 விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள், 50 மகளிர் சுய உதவிக்குழுக்கள் – 100 திருநங்கைகளுக்கு உதவித்தொகை, மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனங்கள் என சுமார் 1400 பயனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.**

அப்போது அவர் ஆற்றிய உரை விவரம் வருமாறு:

அமைச்சர் சேகர்பாபு அவர்கள் இந்த நிகழ்ச்சியை ஒவ்வொரு வருடமும் ஏற்பாடு செய்கிறார். அவர் பேசும்போது சொன்னார், பிறந்தநாளுக்காக நான் கலந்துகொள்கின்ற முதல் நிகழ்ச்சி என்று. அதில் சின்னத் திருத்தம். முதல் நிகழ்ச்சி இல்லை. ஒரே நிகழ்ச்சி இது மட்டும்தான். வேறு எந்த நிகழ்ச்சியிலும் என் பிறந்தநாளுக்காகக் கலந்து கொள்வதில்லை.

### தந்தை பெரியார் திடல்

கழகத்தினரின் வாழ்த்துகளை வாங்குவேன். அமைச்சர் சேகர்பாபு அவர்கள் அழைத்ததால், வேறுவழி இல்லாமல் இங்கு வந்து இருக்கிறேன். அதற்கு இரண்டு காரணம். ஒன்று நிகழ்ச்சியை நடத்துவது இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு அவர்கள். இரண்டாவது காரணம், நிகழ்ச்சி நடக்கின்ற இடம் தந்தை பெரியார் திடல். இந்த இரண்டும்தான் இங்கு வந்ததற்குக் காரணம். எனவே, இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நம் `திராவிட மாடல் அரசு’, `திராவிட மாடல் நாயகன்’ மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையில், கடந்த மூன்றரை வருடங்களில் சிறப்பான ஆட்சியை நடத்திக்கொண்டு இருக்கிறோம்.

### 100 சதவிகித வெற்றி

சென்ற நாடாளுமன்ற தேர்தலில் மிகப்பெரிய வெற்றியை தமிழ்நாட்டு மக்கள் நமக்குத் தந்து இருக்கிறார்கள். நல்லாட்சி புரிந்ததற்கு ஒரு சான்றிதழைக் கொடுத்து இருக்கிறார்கள். 100 சதவிகித வெற்றியைக் கொடுத்து இருக்கிறார்கள். 40 க்கு 40 தொகுதிகள் வெற்றிபெற்று இருக்கிறோம். இப்போது அதைவிட மிகமிக முக்கியம் வருகின்ற 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல். அது உங்களுக்கே தெரியும்.

தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார். ஆணையிட்டு இருக்கிறார். உறுதிமொழி கொடுத்து இருக்கிறார். `234 தொகுதிகளில் குறைந்தது 200 தொகுதி வெற்றி பெறுவோம்’ என்று சொல்லி இருக்கிறார். திராவிட மாடல் அரசு என்றால், என்ன என்று கேட்கிறார்கள். `எல்லோருக்கும் எல்லாம்’ என்பதுதான் திராவிட மாடல் அரசு. அதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு இந்த நிகழ்ச்சி.

### `திராவிட மாடல்’ நிகழ்ச்சி

இந்த நிகழ்ச்சிகூட ஒரு `திராவிட மாடல்’ என்று சொல்லலாம். ஏனென்றால், இங்குப் பார்த்தீர்கள் என்றால், கழகத்தின் மூத்த முன்னோடிகள் 100 பேருக்குப் பொற்கிழி, 250 கல்லூரி மாணவ, மாணவிகளுக்குக் கல்வி உதவித்தொகை, 375 விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள், 500 பெண்கள் அடங்கிய 50 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு உதவித்தொகை, 100 திருநங்கைகளுக்கு உதவித்தொ கை, 10 மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர மோட்டார் வாகனம் என இன்றைக்கு இந்த நிகழ்ச்சியில் மட்டும் 1,335 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை நம் சேகர்பாபு அண்ணன் அவர்கள் சென்னை கிழக்கு மாவட்டத்தில் ஏற்பாடு செய்துள்ளார் என்றால், வருகின்ற சட்டமன்ற தேர்தலுக்குத் தயார் ஆக வேண்டும். நம் கழகத்தின் திட்டங்களை மக்களிடம் கொண்டுபோய் சேர்க்க வேண்டும். திராவிட மாடல் அரசின் சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்த்து, எப்போதுமே நம் சென்னை கிழக்கு மாவட்டம், `கழகத்தின் கோட்டை’ என்பதை உறுதி செய்ய வேண்டும். நிச்சயம் ஜெயிக்கப் போவது உறுதி. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், கடந்த மூன்று நாட்களாக டெல்டா பகுதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டேன். அரசு நிகழ்ச்சி, கழக நிகழ்ச்சி என்று பல் வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று வந்து இருக்கிறேன். மக்களிடம் அப்படியொரு எழுச்சி இருக்கிறது. குறிப்பாக, தாய்மார்களிடம் அப்படியொரு எழுச்சி இருக்கிறது. நிச்சயம் இந்த முறை, ஏழாவது முறையாக ஆட்சி அமைக்கப் போவது உறுதி. நம் கழகத் தலைவர் அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சர் நாற்காலியில் தமிழ்நாட்டு மக்கள் உங்களின் ஒத்துழைப்பால் உட்கார வைப்பது உறுதி.

### தேர்தல் வேலைகள்

தேர்தல் வேலைகளை, தி.மு.க.தான் முதலில் ஆரம்பித்துள்ளது. நாம் தேர்தல் வேலைகளை ஆரம்பித்துவிட்டோம். எப்படித் தேர்தல் வேலையை முதன்முதலில் ஆரம்பித்துள்ளோமோ, அதேபோல் தேர்தல் முடிவிலும், நாம்தான் முதலில் வருவோம் என்பதைக் கூறிக் கொள்கிறேன். யார், எப்படி வந்தாலும் பரவாயில்லை. உங்களின் எதிரணியில் இருக்கும் கூட்டணியைப் பற்றி உங்களுக்குத் தெரியும். `கள ஆய்வு’ நடத்துகிறோம் என்று சொல்லி, ஒவ்வொரு இடத்திலும் `கலவர ஆய்வு’தான் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். எல்லா நிகழ்ச்சிகளிலும் சண்டை. ஆனால், நம் கூட்டணி மிகப்பெரிய வெற்றிக்கூட்டணி.

### வெற்றிக்கூட்டணி

நம் எதிரணியில் இருக்கின்ற அ.தி.மு.க-வின் பொருளாளர் அண்ணன் திண்டுக்கல் சீனிவாசன் அவர்கள் கள ஆய்வு கூட்டத்திலேயே சொல்கிறார். `கூட்டணிக்கு வாருங்கள்’ என்று சொன்னால், `ஒருவன் 100 கோடி கேட்கிறான். ஒருவன் 20 தொகுதி வேண்டும் என்கிறான். பேரம் பேசுகிறான்’ என்று வெளிப்படையாகவே பேச ஆரம்பித்துவிட்டார்கள். ஆனால், நம் கூட்டணி வெற்றிக் கூட்டணி.

நம் கழகத் தலைவர் கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்று சந்தித்த அத்தனை தேர்தல்களிலும் வெற்றியைப் பெற்றுள்ளோம். 100 சதவிகித வெற்றியைப் பெற்று இருக்கிறோம். அந்த வெற்றியை அடுத்தத் தேர்தலிலும் உறுதிசெய்ய வேண்டும் என்றால், இங்கு வந்திருக்கின்ற கழகத் தோழர்கள், உடன்பிறப்புகள், நீங்கள் அனைவரும் களத்தில் இறங்கி, தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு, நம் வெற்றியை உறுதிசெய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேம்.

எனது பிறந்தநாள் விழாவில், இவ்வளவு சிறப்பான திட்டங்களை உங்களையெல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பைக் கொடுத்த அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் மீண்டும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

சட்டமன்ற உறுப்பினர்கள் இல.பரந்தாமன், பிரபாகர்ராஜா, ஜோசப் சாமுவேல், பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, ரங்கநாதன், மற்றும் கழக முன்னணியினர், விளையாட்டு வீரர்கள், ஏராளமான பொதுமக்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது பிறந்த நாளையொட்டி சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் ஏற்பாட்டில் கழகத்தின் 100 மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி, அவர்களின் வாழ்த்துகளைப் பெற்றார். மேலும், கல்லூரி மாணவ – மாணவியர் 250 பேருக்கு கல்வி உதவித்தொகை, 375 விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள், 50 மகளிர் சுய உதவிக்குழுக்கள், சுழல் நிதி 100 திருநங்கைகளுக்கு உதவித்தொகை, மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனங்கள் என சுமார் 1400 பயனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை பெரியார் திடலில் நேற்று முன்தினம் நடைபெற்ற விழாவில் துணை முதல்வர் உதய நிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தயாநிதிமாறன் எம்.பி., உள்ளிட்ட கழக முன்னணியினர் உள்ளனர்.

---

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசின் திட்டங்கள் மூலம்

# கரூர் மாவட்ட பொருளாதாரம் ரூ.50 ஆயிரம் கோடியாக உயர்த்தப்படும்!

## அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பேச்சு!

கரூர்.நவ.29.

கரூர் மாவட்டத்திற்கு திராவிட மாடல் அரசு ரூ. 3000 கோடி மதிப்பிலான வளர்ச்சி திட்டங்களை வழங்கியுள்ளது. கரூர் பொருளாதாரத்தை ரூ. 50ஆயிரம் கோடியாக உயர்த்த முதலமைச்சர் மு .க. ஸ்டாலின் அவர்களின் அரசு தேவையான அனைத்து திட்டங்களையும் வழங்கும் என அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பேசினார்.

கரூர் மாவட்டத்தில் 73 சங்கங்களை சேர்ந்த தொழில் முனைவோர் ஒன்றிணைந்து உருவாக்கிய ‘கரூர் விஷன் 2030’ என்ற கூட்டமைப்பு வரும் 2030ம் ஆண்டுக்குள் கரூரில் பொருளாதார வளர்ச்சியை ரூ.50,000 கோடி அளவுக்கு இலக்கு வைத்து நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இதனையொட்டி கரூர் விஷன் 2030 திட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்திய தொழில் கூட்டமைப்பு (சிஐஐ) கரூர் கிளை மற்றும் யங் இண்டியன்ஸ் (ஒய்ஐ) கரூர் திருவள்ளுவர் மைதானத்தில் மாரத்தான் மற்றும் வாக்கத்தான் போட்டிகள் நடைபெற்றன. சிஐஐ கரூர் கிளை தலைவர் பாலசுப்பிரமணியன், யங் இண்டியன்ஸ் தலைவர் கார்த்திகேயன் வரவேற்க, மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி, தேசியக் கொடி மற்றும் ஒலிம்பிக் கொடியை ஏற்றி வைத்து ஒலிம்பிக் ஜோதியை பெற்றுக்கொண்டார்., “கரூர் விஷன் 2030 என்ற திட்டம் மூலம் கரூர் பொருளாதாரத்தை ரூ.50,000 கோடியாக உயர்த்துவோம். அதற்கு தேவையான திட்டங்களை முதல்வர் மற்றும் துணை முதல்வர் நமக்கு வழங்குவார்கள்” என்றார். கரூர் மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல், எஸ்.பி.ஃபெரோஸ் கான் அப்துல்லா, கிருஷ்ணராய புரம் எம்எல்ஏ க. சிவகாமசுந்தரி, மாவட்ட வருவாய் அலுவலர் கண்ணன், மாநகராட்சி ஆணையர் சுதா, மற்றும் தொழிலதிபர்கள் கலந்து கொண்டனர்.



கரூர் அட்லஸ் கலையரங்கில் தொழில் முனைவோருடன் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. இதில் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பேசியதாவது

திமுகழக ஆட்சி அமைந்த பிறகு கரூர் மாவட்டத்திற்கு வேளாண்மை கல்லூரி, அரவக்குறிச்சி கடவூரில் அரசு கலைக் கல்லூரி உள்ளிட்ட ரூ. 3000 கோடி ரூபாய் அளவிற்கு வளர்ச்சித் திட்டங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கியுள்ளார்கள். மேலும் பல்வேறு திட்டங்கள் இடம் தேர்வு செய்வதில் தொய்வு ஏற்பட்டது. அதனை வேகப்படுத்தும் பணிகள் கலெக்டர் தலைமையில் துறை அதிகாரிகள் மூலம் விரைவு படுத்தப்பட்டுள்ளது.

அடுத்து மாவட்டத்தின் தொழில் வளர்ச்சி கட்டமைப்புகள் எப்படி உருவாக்கப்பட வேண்டும் என அந்தந்த துறை அதிகாரிகளிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்று செயல் வடிவம் பெற துவங்கியுள்ளன. 200 ஏக்கர் பரப்பளவில் சிப்காட் முதலமைச்ச ரால் அறிவிக்கப்பட்டது . பொங்கலுக்குள் நில ஆர்ஜிதம் செய்யும் பணி முடிவடையும். அரவக்குறிச்சி அருகே முருங்கை பூங்கா, கரூர் டிரேட் சென்டர், சிறிய ஜவுளி பூங்கா, விமான நிலையம், அமைக்கப் பட உள்ளது. தற்போது ஏற்றுமதியாளர்கள் இரண்டு மணி நேரம் காரில் பயணம் செய்து வந்து செல்ல வேண்டி உள்ளதால் விமான நிலையம் அமைக்கப்பட வேண்டும். தனியாரிடமிருந்து இடத்தை பெற வேண்டி இருப்பதால் அவர்களுடைய உரிமையையும் பார்க்க வேண்டியது உள்ளது. கரூர் மாநகராட்சி ஆனதால் வரி உயர்த்தப்பட்டுள்ளது . அதை குறைக்க வேண்டும் எனக்கு கோரிக்கை வைத்தனர். வரி குறைக்கப்படும்.

கரூர் காமராஜ் மார்க்கெட் ஏற்கனவே இருந்த வியாபாரிகளுக்கு முன்னுரிமை அளித்து பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளது. அமராவதி ஆறு ஆண்டுக்கு ஒரு முறை தூர்வாரப்படும். தாதம்பாளையம் ஏரி வனத்துறை வசம் இருப்பதால் மாற்று இடம் ஒதுக்கி பொதுப் பணித்துறை வசம் எடுத்து பணிகள் மேற்கொள்ளப்படும். கரூர் மாவட்ட விளையாட்டு அரங்கில் நீச்சல் குளம் அமைக்கப்படும்.

கரூர் புறநகர் பேருந்து நிலையம் தொடர்பான வழக்கு விரைவில் முடிந்து நல்ல தீர்ப்பு வரும் என எதிர்பார்க்கிறோம். 40% பணிகள் நடைபெற்ற நிலையில் காழ்ப் புணர்ச்சியோடு கோர்ட்டுக்கு போய் உள்ளனர். அதேபோல் போட்டித் தேர்வு மாணவர்களின் வசதிக்காக ரூ.6.75 கோடி மதிப்பீட்டில் பிரமாண்ட நூலகம் கரூரில் அமைக்கப்படுகிறது. இதற்கும் சிக்கல் ஏற்படுத்தினார்கள். பிரச்சனை தீர்க்கப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது. கரூர் பழைய காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மகளிர் தங்கும் விடுதி அமைக்க டெண்டர் தயாரிக்கப்பட்டு வருகிறது. கரூர் மாவட்டத்தில் முதன்முறை யாக பணிபுரியும் மகளிருக்கான தங்கும் விடுதி அமைய இருக்கிறது. வெங்கமேடு மீன் மார்க்கெட் பணி விரைவில் முடிவடையும்.

டைட்டல் பார்க் அமைக்க இடம் தேர்வு செய்யும் பணி நடைபெறுகிறது. சிப்காட் வளாகத்தில் தொழிலாளர்கள் தங்கும் விடுதி மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என பல்வேறு கோரிக்கைகளை இங்கே கூறினார்கள். அனைத்தையும் நிறைவேற்ற நான் பாடுபடுவேன். வாக்களித்த மக்களுக்கு வளர்ச்சி திட்ட பணிகளை நிறைவேற்றுவது எனது கடமை.

ரூ. 40 கோடி மதிப்பீட்டில் குளித்தலை மருத்துவமனையை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தி பணிகள் நடைபெற்று வருகிறது. தடுப்பணைகள் கட்டப்படும் நெரூர் உண்ணியூர் பாலம் 100 கோடி மதிப்பீட்டில் பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது. இந்தப் பாலம் சென்னை செல்வோருக்கு ஏதுவாக அமையும். மேட் இன் இந்தியா போல மேட் இன் கரூர் என்ற நிலை உருவாக வேண்டும். மாவட்ட வளர்ச்சிக்கு தேவையான அனைத்து தேவைகளையும் அரசிடம் இருந்து பெற்று தர வேண்டியது எனது கடமை பொறுப்பு என உறுதி அளிக்கிறேன். தொடக்க பயணம் வெற்றிகரமாக அமைந்துள்ளது எனவே நிறைவான வெற்றியை பெறுவோம். நீங்கள் செய்ய நினைப்பதை உடனிருந்து செய்வேன். கூட்டு முயற்சியால் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்றார்.



கழக இளைஞரணி செயலாளரும் தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றியம் சார்பில் உடையாப்பட்டி ஊராட்சியில் உள்ள வாசவி முதியோர் இல்லத்தில் அறுசுவை உணவை அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றிய செயலாளரும் முன்னாள் ஒன்றிய குழு தலைவருமான ஏ.விஜயகுமார் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய குழு தலைவர் ஹேமலதா விஜயகுமார், ஒன்றிய துணைச் செயலாளர்கள் அய்யாதுரை காந்திமதி,ஹரி மகாலட்சுமி,மாவட்ட பிரதிநிதிகள் குமரவேல், அகரம் ராஜேந்திரன், இன்பராசு,மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் செந்தில்குமார், கலைச்செல்வன், பொருளாளர் பழனி, அயோத்தியபட்டினம் பேரூராட்சி தலைவர் செல்வராஜ், செல்வ சூரியா சேதுபதி,பாரதி ஜெயக்குமார், சுப்பிரமணி, சேட்டு, மனோ சூரியன், அன்னக்கொடி, செல்வி சக்திவேல், சிந்தாமணி கஜேந்திரன், செந்தில் உஷா, ராஜகோபால், தீன தயாளன்,பிரேமா தனசேகரன்,மணியம்மாள் குமார், மணி, பிரபாகரன்,ராணி, அர்ஜுனன். வேடன். ஜெயம் டிவி நிர்வாக இயக்குனர் இளையராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

தருமபுரி, கிருஷ்ணகிரி ஒருங்கிணைந்த முன்னாள் மாவட்டச் செயலாளர்

# எம்.சென்ன கேசவன் துணைவியார் செ.அமராவதி அம்மாள் மறைவு!

## மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. ஆறுதல் – இரங்கல்!

கிருஷ்ணகிரி, நவ, 29–

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், மத்தூர் தெற்கு ஒன்றியம் இனாம் காட்டுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த தருமபுரி, கிருஷ்ணகிரி ஒருங்கிணைந்த மாவட்டக் கழகச் செயலாளரும், முத்த மிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களிடம் நீங்கா நன்மதிப்பைப் பெற்றவருமான தியாகச் சுடர் நினைவில் வாழும் எம். சென்னகேசவன் அவர்களின் மனைவியும் இனாம் காட்டுப்பட்டி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் செ.மனோகரன், சாமல்பட்டி வேளாண்மை கூட்டுறவு வங்கியின் செயலாளர் செ.சிவகுமார் மற்றும் திமுக இளைஞர் அணி முன்னாள் மாவட்ட துணை அமைப்பாளர் செ. கார்த்திகேயன் ஆகியோரின் தாயாருமான திருமதி.செ.அமராவதி அம்மாள் அவர்கள் நேற்று முன்தினம் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



அம்மையாரின் மறைவு செய்தி அறிந்து கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலிசெலுத்தினா.

நேற்று (28.11.2024) மதியம் 2 மணிக்கு அம்மையாரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அம்மையாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அந்த கிராம மக்களுக்கும், கழகத் தோழர்களுக்கும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டுள்ளார்.



அரியலூர் மாவட்டம், அரியலூர் போக்குவரத்துக் கழக பணிமனையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப)லிட், கும்பகோணம் கோட்டத்தில் பணிபுரிந்த காலத்தில் மறைந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணைகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா மற்றும் பலர் உள்ளனர்.



தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி. வி. கணேசன் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு விருத்தாசலம் நகர கழக சார்பில் அறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து கழகக் கொடி ஏற்றி வைத்து , நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் ஒன்றிய கழக, நகர கழக , பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.